# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2183/31- 2020 ජූලි මස 08 වැනි බදාදා - 2020.07.08

**2183/31 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**சப்பிரகமுவ மாகாண மாகாண சபை**

*2020.01.01. ஆம் திகதி தொடக்கம் 2020.05.31 ஆந் திகதி வரை வரவு செலவு மதிப்பீடு*

***1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 27 (அ) பிரிவின் கீழ் கௌரவ ஆளுநர் அவர்களின் உத்தரவின்படி மாகாண சபை நிதியத்திலிருந்து செலவினங்களை மேற்கொள்வதற்காக ஒழுங்கு செய்யப்பட்டது***

***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆறாவது மாகாண சபையின் பதவிக்காலம் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதியுடன் முடிவடைந்தமையினால் 1987 ஆம் ஆண்டின் மாகாண சபைகள் சட்டத்தின் 27(அ) பிரிவின்படி எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் உத்தரவளித்தல்***

*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் மே மாதம் 31 ஆந் திகதிவரை ஐந்து மாதகால எல்லைக்கான சேவைச் செலவினங்களுக்காக ஏற்பாடு செய்தல், அந்த சேவைச் செலவினங்களுக்காக சப்பிரகமுவ மாகாணத்திற்குள் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரமளித்தல், அந்த கால எல்லைக்குள் சப்பிரகமுவ மாகாண சபையின் சில விவகாரங்கள் தொடர்பில் நிதி ஒதுக்கீடுகளை வழங்குதல் அந்த விவகாரங்கள் தொடர்பிலான செலவினங்களுக்காக அக்கால எல்லைக்குள் தேவைப்படும் பணங்களை சப்பிரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது பணத்தொகைகளாக அல்லது முற்பணங்களாகச் செலுத்துவதற்கு இடமளிப்பதற்கும், சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திற்கு அப்பணத் தொகைகளை மீளச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் மேற்கூறிய கருமங்களுடன் தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானவொரு கட்டளையாகும்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆளுநர் ஆகிய என்னால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

*அதிகார மளித்தல்.*

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாண சபையின் ஆறாவது (06) பதவிக்காலம் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதியுடன் முடிவடைந்தமையினால் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் 27(அ)ஆம் பிரிவின்படி எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியுடன் ஆரம்பமாகி 2020ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஐந்து மாத கால எல்லைக்காக சப்பிரகமுவ மாகாண சபையின் சேவைச் செலவினங்களுக்காகத் தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பதின்மூவாயிரத்து இருநூற்றி எட்டு மில்லியன்களும் இருநூற்றி தொண்ணூற்றி ஆறாயிரம் ரூபாவான (13,208,296,000 ரூபா) சப்பிரகமுவ மாகாண சபையின் செலவினங்களை, சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து செலவிடுவதற்கு இந்த மாகாணத்தின் பிரதான செயலாளருக்கும் கணக்கீட்டு அலுவலர்களுக்கும் இத்தால் உத்தரவளிக்கின்றேன்.

*2020 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாத காலத் திற்கான ஒதுக்கீடுகள்.*

2. (1) ஏதாவதொரு பணத் தொகையைச் செலவிடுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்ற அதேபோன்று ஏனையவொரு சட்டத்திற்கு பங்கமேற்படாமல், அக் கட்டளையில் "ஐந்து மாத கால எல்லை" எனக் குறிப்பிடப்படுகின்ற, 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியுடன் ஆரம்பமாகி 2020 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் கால எல்லையின் சேவைச் செலவினங்களுக்காகத் தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பதின்மூவாயிரத்து இருநூற்று எட்டு மில்லியன்களும் இருநூற்று தொண்ணூற்று ஆறாயிரம் ரூபாவான (13,208,296,000 ரூபா ) சப்பிரகமுவ மாகாண சபையின் செலவினம் :-

(அ) சப்பிரகமுவ மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணங்களாகச் செலுத்துவதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்ற கொடுப்பனவுகளாலும்,

(ஆ) சப்பிரகமுவ மாகாணத்திற்குள் கடன்களாகப் பெற்றுக் கொள்ளப்படும் பணத்தொகைகளால் அல்லது சப்பிரகமுவ மாகாணத்திற்காக பெற்றுக் கொள்வதற்கு இத்தால் அதிகாரமளிக்கப்படுகின்ற கடன்களாகப் பெற்றுக் கொள்ளப்படுகின்ற பணத் தொகைகளால் எதரீடு செய்யப்படுதல் வேண்டும். இங்கு மேலே குறிப்பிடப்பட்ட பதின்மூவாயிரத்து இருநூற்று எட்டு மில்லியன்களும் இருநூற்று தொண்ணூற்று ஆறாயிரம் ரூபாவான (13,208,296,000 ரூபா ) பணத்தொகை இக்கட்டளையின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் சப்பிரகமுவ மாகாண சபைக்காகவும் அதன் பேரில் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அதிகாரமளிக்கப்படுகின்ற ஏதேனும் எழுத்து மூலமானவொரு சட்டத்திற்குப் பங்கமேற்படாதவாறு செயற்படுதல் வேண்டும்.

*2020 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களுக்காக சப்பிரகமுவ மாகாண சபையின் சில விவகாரங்கள் தொடர்பில் நிதி வழங்குதல்.*

3. (1) 2020 ஆம் நிதியாண்டின் முதல் ஐந்து மாத கால எல்லைக்குள், இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விவகாரத்தின் மூலமும் சப்பிரகமுவ மாகாண சபைக்குக் கிடைக்கும் VI ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுகைகள் அவ்விவகாரத்தின் கணக்கிற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும். அத்துடன் அவ்வாறு வரவு வைக்கப்பட்ட பெறுகைகளின் மொத்தமானது, VI ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஆகக் குறைந்த எல்லையிலும் குறைவடையாதிருத்தல் வேண்டும்.

4. இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விவகாரம் தொடர்பிலும் 2020 ஆம் நிதியாண்டின் முதல் ஐந்து மாத கால எல்லைக்குள் சப்பிரகமுவ மாகாண சபையினால் மேற்கொள்ளப்படும் செலவினங்கள், அக்கால எல்லைக்குள் அந்த விவகாரத்தின் மூலம் சப்பிரகமுவ மாகாண சபை பெறும் பெறுகைகளால் செலுத்தப்படுதல் வேண்டும். அவ்வாறாயினும் அச்செலவினங்கள் அந்த அட்டவணையின் V ஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

5. இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் IVஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஏதாவதொரு விவகாரம் தொடர்பில் 2020 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாத கால எல்லையின் இறுதியில் நிலுவையாகவுள்ள பற்று நிலுவையானது அந்த அட்டவணையின் VIIஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அத்துடன் அக்கால எல்லையின் இறுதியில் அவ்விவகாரத்தின் மொத்தப் பொறுப்புக்கள் VIII ஆம் நிரலின் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

*2020 ஆம் நிதியாண்டின் முதல் ஐந்து மாத கால எல்லைக்குள் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விவகாரங்கள் தொடர்பில் செலவினங்களை மேற்கொள்வதற்காக சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணங்களைச் செலுத்தல்.*

6. 2020 ஆம் நிதியாண்டின் முதல் ஐந்து மாத கால எல்லைக்குள், ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் IV ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு விவகாரத்தின் மூலமும் சப்பிரகமுவ மாகாண சபை பெறும் பெறுகைகள், சப்பிரகமுவ மாகாண சபையினால் மேற்கொள்ளப்படும் செலவினங்களை எதிரீடு செய்வதற்குப் போதாமையாக இருப்பின் அச்செலவினங்களை எதிரீடு செய்வதற்கென ஆளுநர் அவர்களால் கருதப்படும் பணத்தொகைகள் சப்பிரகமுவ மாகாண நிதியத்திலிருந்து அல்லது முற்பணங்களாகச் செலுத்தப்பட வேண்டுமென அவரால் கட்டளையொன்றின் மூலம் விதிக்கப்படலாம், ஆயினும் அவ்வாறு வழங்கப்படும் முற்பணங்களின் மொத்தத் தொகையானது, அந்த அட்டவணையின் V ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். மேற்கூறிய விவகாரம் தொடர்பில் முற்பணங்களாக அவ்வாறு கொடுக்கப்பட்ட பணத்தொகைகள் எதுவும் என்னால் விதிக்கப்படும் கட்டளையொன்றிற்கமைய மீளவும் மாகாண சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

*நிகழ்ச்சித்திட்டம் மீண்டு வரும் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் செலவிடப்படாத பணத் தொகைகளை அந்த நிகழ்ச்சித் திட்டத்திலேயே ஏனையவொரு ஒதுக்கத்திற்கு அல்லது அத் தலைப்பின் கீழான ஏனையவொரு நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாற்றம் செய்யும் அதிகாரம்.*

7.(1) இக்கட்டளையின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு தலைப்பின் கீழ் காட்டப்படும் ஏதாவதொரு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான மீண்டு வரும் செலவினங்களுக்கு அந்த அட்டவணையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஒதுக்கப்பட்டுள்ள ஆனால் செலவு செய்யப்படாத அல்லது எதிர்காலத்திலும் செலவாகாதென எதிர்பார்க்கக் கூடிய ஏதாவதொரு பணத்தொகை அந்த நிகழ்ச்சித் திட்டத்திலேயே மூலதனச் செலவினங்களாக அல்லது ஏனையவொரு நிகழ்ச்சித் திட்டத்தின் மீண்டுவரும் செலவினங்களாக அல்லது மூலதனச் செலவினங்களாக ஒதுக்கத்திற்கு பிரதான செயலாளரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் ஏனையவொரு உத்தியோகத்தரின் கட்டளைப்படி மாற்றப்படலாம்.

(2) இக்கட்டளையின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு தலைப்பின் கீழ் காட்டப்படும் மூலதனச் செலவினங்களாக ஒதுக்கப்பட்ட பணத்தொகை அந்த நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து அல்லது கருத்திட்டத்திலிருந்து மாற்றம் செய்யும் நடவடிக்கை பிரதான செயலாளரால் மாத்திரம் மேற்கொள்ளப்படலாம்.

8. (1) அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களை மேற்கொள்வதற்கு வரிகள் மற்றும் ஏனைய மூலங்களிலிருந்து பெறும் பெறுகைகள், எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகைகளை விடக் குறைவடையலாம் என்பதற்கு; அல்லது.

(2) ஏதாவதொரு விவகாரத்திற்காக அல்லது விவகாரங்களுக்காக முதலில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்படமாட்டாதென ஆளுநர் திருப்தியடையும் சந்தர்ப்பமொன்றில் சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து அல்லது பணத்தொகைகளிலிருந்து, தம்மால் வழங்கப்படும் ஆணைப் பத்திரமொன்றின் அதிகாரத்தின் கீழ் செலவிடுவதற்காக விடுவிக்கப்பட்ட பணத்தொகைகள் முழுமையாக ஆளுநர் அவர்களால் நீக்கிக் கொள்ளப்படலாம்.

இக் கட்டளையின் இரண்டாம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய மற்றும் ஆகக் குறைந்த எல்லை களை மாற்றம் செய்வதற்கு ஆளுநர் அவர்களுக்குள்ள அதிகாரம்

9. ஆளுநர் அவர்களால் -

(அ) இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் V ஆம் VI ஆம் VII ஆம் மற்றும் VIII ஆம் நிரல்களில் காட்டப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைகளுள் எதனையும்.

(ஆ) இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் VI ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைகளும் :

கட்டளைகள் மூலம் 2021 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன் மாற்றப்படலாம் அல்லது புதுப்பிக்கப்படலாம்.

இப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட எந்தவொரு கட்டளையும் ஆளுநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றி செயற்படாதிருத்தல் வேண்டும்.

அத்தகைய கட்டளையொன்று எத்தினத்தில் இடப்படுகின்றதோ அத்தினத்திற்கு முன்னரானவொரு தினத்திலிருந்து அது செயற்பட வேண்டுமென அதில் பிரகடனப்படுத்தியே குறிப்பிடப்பட்டிருப்பின் அவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து அது செயற்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

10. ஆளுநர் அவர்களால், எழுத்து மூலமான கட்டளையொன்றின் மூலம் இக்கட்டளையின் இரண்டாம் அட்டவணையின் பொருத்தமான நிரல்களுக்கு ஏதாவதொரு விவகாரத்தை சேர்ப்பதன் மூலமும் :-

(அ) அவ்விவகாரம் தொடர்பிலான அனைத்து ஆகக்கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றின் ஏதாவதொரு எல்லையையும்,

(ஆ) அந்த விவகாரம் தொடர்பிலான ஆகக்குறைந்த எல்லையைச் சேர்ப்பதன் மூலமும் அந்த அட்டவணை திருத்தப்படலாம்.

11. இந்த உத்தரவு சப்பிரகமுவ மாகாணத்தின் ஏழாம் (7) மாகாண சபைக் கூட்டத்தை நடத்துவதற்காக அழைக்கப்படும் திகதியில் அல்லது மாகாண சபையின் பணிகள் மீள ஆரம்பிக்கப்படும் திகதியில் அல்லது அத் திகதியில் இருந்து மூன்று (3) மாத கால எல்லை முடிவடையும் திகதியில் அல்லது 2021 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி அல்லது அவ்விரு தினங்களுள் முதலில் வரும் திகதியில் முடிவடையும்.

**டிக்கிரி கொப்பேகடுவ,**
ஆளுநர்,
சப்பிரகமுவ மாகாணசபை.

2020, ஏப்பிறல் 22.

## இரண்டாம் அட்டவணை

### முற்பணக் கணக்கு விவகாரங்கள்

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | விடய இலக்கம் | முற்பணக் கணக்கு வகை | செலவினங்களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக்குறைந்த எல்லை | பற்று நிலுவையின் உச்ச எல்லை | வரவுகளின் உச்ச எல்லை |
| | மொத்தக் கூட்டுத்தொகை | | | 851,153.00 | 297,770,000 | 4,668,281,000 | 1,200,000 |
| | மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் | | உப மொத்தம் | 805,213,000 | 271,380,000 | 4,456,141,000 | - |
| 1 | கௌரவ ஆளுநர் அவர்களின் அலுவலகம் | 80001 | மாகாண அ. உ. முற்பணம் | 850,000 | 240,000 | 7,536,000 | - |
| 2 | மாகாண சபைச் செயலகம் | 80101 | மாகாண அ. உ. முற்பணம் | 850,000 | 270,000 | 8,365,000 | - |
| 3 | மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு | 80201 | மாகாண அ. உ. முற்பணம் | 600,000 | 270,000 | 4,752,000 | - |
| 4 | கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு | 80301 | மாகாண அ. உ. முற்பணம் | 450,000 | 170,000 | 3,858,000 | - |
| 5 | பிரதான செயலாளர் | 80401 | மாகாண அ. உ. முற்பணம் | 12,500,000 | 4,700,000 | 87,800,000 | - |
| 6 | பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) | 80701 | மாகாண அ. உ. முற்பணம் | 2,400,000 | 800,000 | 1,600,000 | - |
| 7 | பிரதி பிரதான செயலாளர் (பொறியியற்கலைகள்) | 80801 | மாகாண அ. உ. முற்பணம் | 10,125,000 | 2,400,000 | 89,725,000 | - |
| 8 | மாகாண வருமானத் திணைக்களம் | 80901 | மாகாண அ. உ. முற்பணம் | 2,125,000 | 850,000 | 14,275,000 | - |
| 9 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி சுகாதார, உள்நாட்டு வைத்திய, மகளிர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்கு வரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81001 | மாகாண அ. உ. முற்பணம் | 14,300,000 | 1,900,000 | 38,600,000 | - |
| 10 | சுகாதாரத் திணைக்களம் ஆயுர்வேதத் திணைக்களம் | 81101 | மாகாண அ. உ. முற்பணம் | 155,000,000 | 50,000,000 | 994,954,000 | - |
| 11 | ஆயுர்வேதத் திணைக்களம் | 81201 | மாகாண அ. உ. முற்பணம் | 11,725,000 | 5,000,000 | 68,725,000 | - |
| 12 | கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் | 81301 | மாகாண அ. உ. முற்பணம் | 3,900,000 | 1,500,000 | 24,800,000 | - |
| 13 | மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய அடிப்படை வசதிகள், சுற்றுலாத்துறை, விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு | 81401 | மாகாண அ. உ. முற்பணம் | 2,438,000 | 1000,000 | 21,238,000 | - |

இரண்டாம் அட்டவணை (தொடர்ச்சி)

## முற்பணக் கணக்கு விவகாரங்கள்

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் | விடய இலக்கம் | முற்பணக் கணக்கு வகை | செலவினங்களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை | பற்று நிலுவை களின் உச்ச எல்லை | வரவுகளின் உச்ச எல்லை |
| 14 | மாகாண வீதி அபிவிருத்தி, கிராமிய அடிப்படை வசதிகள், சுற்றுலாத்துறை, விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு திணைக்களம் | 82001 | மாகாண அ. உ. முற்பணம் | 1,160,000 | 440,000 | 12,720,000 | |
| 15 | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் | 82101 | மாகாண அ. உ. முற்பணம் | 875,000 | 200,000 | 8,175,000 | |
| 16 | சமூக நலன்புரி, நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் அமைச்சு | 83001 | மாகாண அ. உ. முற்பணம் | 4,430,000 | 1,700,000 | 32,980,000 | |
| 17 | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் நன்னடத்தைகள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் | 83101 | மாகாண அ. உ. முற்பணம் | 5,475,000 | 3,300,000 | 28,675,000 | |
| 18 | நன்னடத்தைகள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் | 83201 | மாகாண அ. உ. முற்பணம் | 4,675,000 | 1,500,000 | 28,175,000 | |
| 19 | கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாச்சார விவகார அமைச்சு | 84001 | மாகாண அ. உ. முற்பணம் | 5,100,000 | 940,000 | 28,660,000 | |
| 20 | கல்வித் திணைக்களம் | 84101 | மாகாண அ. உ. முற்பணம் | 542,250,000 | 184,000,000 | 3,025,293,000 | |
| 21 | காணி, மாகாண நீர்ப்பாசன, விவசாய,விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதார, மீன்பிடித் தொழில் அமைச்சு | 85001 | மாகாண அ. உ. முற்பணம் | 1,110,000 | 500,000 | 13,810,000 | |
| 22 | காணி ஆணையாளர் திணைக்களம் | 85101 | மாகாண அ. உ. முற்பணம் | 2,900,000 | 1,400,000 | 15,000,000 | |
| 23 | விவசாயத் திணைக்களம் | 85201 | மாகாண அ. உ. முற்பணம் | 12,750,000 | 5,000,000 | 66,750,000 | - |
| 24 | விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதாரத் திணைக்களம் | 85301 | மாகாண அ. உ. முற்பணம் | 6,375,000 | 2,900,000 | 23,075,000 | - |
| 25 | மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம் | 86101 | மாகாண சபை உறுப்பினர் களுக்கான பலவின முற் பணங்கள் | 850,000 | 400,000 | 7,600,000 | |

இரண்டாம் அட்டவணை (தொடர்ச்சி)

## முற்பணக் கணக்கு விவகாரங்கள்

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சுக்கள்/திணைக்களங்கள் | விடய இலக்கம் | முற்பணக் கணக்கு வகை | செலவினங் களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை | பற்று நிலுவைகளின் உச்ச எல்லை | வரவுகளின் உச்ச எல்லை |
| | **ஏனைய முற்பணக் கணக்குகள்** | | **உப மொத்தம்** | **45,940,000** | **26,390,000** | **12,140,000** | **1,120,000** |
| 26 | மாகாண சபைச் செயலகம் | 81002 | மா. ச. உறுப்பினர் களுக்கான பலவின முற்பணங்கள் | 8,800,000 | 700,000 | 8,000,000 | |
| 27 | முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலையம் புஸ்ஸெல்ல | 80502 | பயிற்சி நிலைய முற்பணக் கணக்குகள் | 3,700,000 | 3,200,000 | 670,000 | 20,000 |
| 28 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூ ராட்சி சுகாதார, உள்நாட்டு வைத்திய, மகளிர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு நிர்மாணத் துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81002 | கணினிக் கருத்திட்டம் | 600,000 | 50,000 | 100,000 | 40,000 |
| 29 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி சுகாதார, உள்நாட்டு வைத்திய, மகளிர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்துத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81003 | பின்னவல இப்பெரணிகம தொணிப்பொருள் பூங்கா | 2,900,000 | 1,000,000 | 100,000 | 270,000 |
| 30 | நீதி மற்றும் சமாதானம், நிதி மற்றும் திட்டமிடல், உள்ளூராட்சி சுகாதார, உள்நாட்டு வைத்திய, மகளிர் விவகார, கூட்டுறவு, வர்த்தக மற்றும் உணவு, போக்குவரத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், ஊடக, வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் சமய விவகார அமைச்சு | 81004 | சப்பிரகமுவ மாகாண அரசாங்க மண்டப முற்பணக் கணக்கு | 1,400,000 | 670,000 | 70,000 | 70,000 |
| 31 | ஆயுர்வேத திணைக்களம் | 81202 | பின்னவல பஞ்ச கர்ம மத்திய நிலையம் | 940,000 | 270,000 | 320,000 | 140,000 |

இரண்டாம் அட்டவணை (தொடர்ச்சி)

## முற்பணக் கணக்கு விவகாரங்கள்

| i | ii | iii | iv | v | vi | vii | viii |
|---|---|---|---|---|---|---|---|
| | அமைச்சுக்கள்/திணைக்களங்கள் | விடய இலக்கம் | முற்பணக் கணக்கு வகை | செலவினங் களின் உச்ச எல்லை | பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை | பற்று நிலுவையின் உச்ச எல்லை | வரவுகளின் உச்ச எல்லை |
| 32 | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | 83102 | நெசவுத் தொழில் நிலையங்களை தாபித்தல் மற்றும் நிருவகித்தல் | 11,000,000 | 9,400,000 | 840,000 | 170,000 |
| 33 | கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம் | 83103 | சிறுகைத்தொழில் நிலையங்களை தாபித்தல் மற்றும் நிருவகித்தல் | 2,500,000 | 1,700,000 | 1,200,000 | 170,000 |
| 34 | கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கலாச்சார விவகார அமைச்சு | 84002 | மனேரிபிட்டிய அட்டுலுகம கல்வி அபிவிருத்தி நிலைய முற்பணக்கணக்குகள் | 8,700,000 | 6,000,000 | 670,000 | 170,000 |
| 35 | விலங்கு உற்பத்தி மற்றும் விலங்கு சுகாதாரத் திணைக்களம் | 85302 | உந்துகொட கால் நடை அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிலைய முற்பணக் கணக்கு | 5,400,000 | 3,400,000 | 170,000 | 70,000 |

## தத்துவ அதிகாரம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆறாம் (6) மாகாண சபையின் பதவிக்காலம் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதியுடன் முடிவடைந்துள்ளமையினால் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 27 (அ) ஆம் பிரிவின்படி எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியுடன் ஆரம்பமாகி 2020 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஐந்து மாத கால எல்லைக்குள் சப்பிரகமுவ மாகாண சபையின் முற்பணக் கணக்கு விவகாரங்களுக்காக தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள இங்கு இரண்டாம் (II) அட்டவணையின் செலவினங்களை சப்பிரகமுவ மாகாண சபையின் நிதியத்திலிருந்து மேற்கொள்வதற்கு அந்த மாகாணத்தின் பிரதான செயலாளருக்கும் கணக்கீட்டு அலுவலர்களுக்கும் இத்தால் உத்தரவளிக்கின்றேன்.

இந்த உத்தரவு சப்பிரகமுவ மாகாணத்தின் ஏழாவது (7) ஆவது மாகாண சபைக் கூட்டம் அழைக்கப்படும் திகதியில் அல்லது மாகாண சபையின் பணிகள் மீள ஆரம்பிக்கப்படும் திகதியில் அல்லது அத்திகதியில் இருந்து மூன்று (03) மாத கால எல்லை முடிடையும் திகதியில் அல்லது 2020 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதியில் அல்லது அவ்விரு தினங்களுள் முதலில் வரும் திகதியில் முடிவடையும்.

**டிக்கிரி கொப்பேகடுவ,**
ஆளுநர்,
சப்பிரகமுவ மாகாணம்.

2019, ஏப்பிறல் 22.

**தத்துவ அதிகாரம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் ஆறாம் (6) மாகாண சபையின் பதவிக்காலம் 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதியுடன் முடிவடைந்துள்ளமையினால் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 27 (அ) ஆம் பிரிவின்படி எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியுடன் ஆரம்பமாகி 2020 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஐந்து மாத எல்லைக்குள் சம்பிரகமுவ மாகாண சபையின் சேவைச் செலவினங்களுக்காக தேவைப்படுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பதிமூவாயிரத்து இருநூற்று எட்டு மில்லியன்களும் இருநூற்று தொண்ணூற்றாறு ஆராயிரம் ரூபாவான (ரூபா 13,208,296,000 )சப்பிரகமுவ மாகாண சபையின் செலவினத்தை மேற்கொள்வதற்கு அந்த மாகாணத்தின் பிரதான செயலாளருக்கும் கணக்கீட்டு அலுவலர்களுக்கும் இத்தால் உத்தரவளிக்கின்றேன்.*

*இந்த உத்தரவு சப்பிரகமுவ மாகாணத்தின் (7 )ஆவது மாகாண சபைக்கூட்டம் நடத்துவதற்காக அழைக்கப்படும் திகதியில் அல்லது மாகாண சபையின் பணிகள் மீள ஆரம்பிக்கப்படும் திகதியில் அல்லது அத்திகதியில் இருந்து மூன்று (03) மாத கால எல்லை முடிடையும் திகதியில் அல்லது 2020 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதியில் அல்லது அவ்விரண்டு தினங்களுள் முதலில் வரும் திகதியில் முடிவடையும்.*

*2020ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத கால எல்லைக்காக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள இடைக்கால அங்கீகரிக்கப்பட்ட கணக்கின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளிலிருந்து 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 05 ஆந் திகதி வரை கிடைக்கப்பெற்ற கூட்டு நிதியின் அளவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 150 ஆம் யாப்பின் (3) ஆம் துணை யாப்பின் ஒதுக்கீடுகளின் கீழ் அதி மேதகு சனாதிபதி அவர்களால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள எதிர்வரும் 3 மாதங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீட்டு அளவுகள் மற்றும் 2020 ஆம் ஆண்டின் முதல் 5 மாதங்களுக்காக எதிர்ப்பார்த்த வருமானங்களை அடிப்படையாகக் கொண்டு இடைக்கால அங்கீகரிக்கப்பட்ட கணக்கொன்றின் உருவில் இந்த மதிப்பீடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.*

*மேலும், என்னால் 2020 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலத்தின் செலவினங்களை மேற்கொள்வதற்காக 2019ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி உத்தரவளிக்கப்பட்ட வரவு செலவு மதிப்பீடுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செலவினங்களும் இந்த உத்தரவின் படி ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளிலிருந்து செலவிட்டுக் கொள்ள வேண்டும் என்பதை அறிவிக்கின்றேன்.*

**டிக்கிரி கொப்பேகடுவ,**
*ஆளுநர்,*
*சப்பிரகமுவ மாகாணம்.*

*2019, ஏப்பிறல் 22.*

*07-6161*